# விளம்பரம்™

**VLAMBARAM™**

☎ : 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி VIII  **MAY 15, 1998**  பாலம் 10


## வீடு விற்பது, வாங்குவது

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று.
எனவே இவை பற்றி பூரணமான இலவச
ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎ : 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன்
sales rep.
RE/MAX Crossroads Rlty Inc.

நம்பிக்கை ▲ நேர்மை ▲ திறமை


- ❊ சூரியன் ஒரு நட்சத்திரமாகுமா? (பக்கம் 10)
- ❊ 5% முதலீட்டுடன் வீடு வாங்குதல் இயலுமா? (பக்கம் 12)
- ❊ யோகாசனப் பயிற்சி வாழ்வுக் காலத்தை அதிகரிக்குமா? (பக்கம் 4)
- ❊ ஆயுள் காப்புறுதி செய்தவர் மரணமடைந்தால் எப்படி பணம் பெறலாம்? (பக்கம்13)
- ❊ உப்பு மனிதனை மூப்படைய செய்யுமா? (பக்கம் 5)
- ❊ வேலைக்கு மனு செய்யும் போது "TO WHOM IT MAY CONCERN" என எழுதலாமா? (பக்கம் 2)
- ❊ யோகாஸ் சார்பில் கிராமத்து விருந்தில் இலவசமாக சாப்பிடலாமா? (பக்கம் 8)


## துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் -
சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு
கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ் ☎ (416) 267-8221

## SNR OPTICAL

அனைத்து டிசைனர் பிறேம்ஸ் மற்றும் கண்ணாடிகள் (Designer Frames & Sunglasses) மேலும் சகல திருத்த வேலைகள் சிறந்தமுறையில் அனுபவமிக்கவரால் செய்துகொள்ள தொடர்புகொள்ளவும்.

- அரசாங்க உதவியில் உள்ளவர்கள், மற்றும் அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.
- 60 வயதிற்கு மேற்பட்டவர்களிற்கு சில வசதிகளுமுண்டு.

ரதி FRAME CONSULTANT (Robert Optician)
☎: (416 )332 9995

## EZ DRIVING SCHOOL

நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற

PL. CALL: JEYAKUMAR
(416) 283-4100
Cell: 822-6741
(9 வருட கால அனுபவ பயிற்சியாளர்)

## SINGAPORE PAGING




Motorola Brovo $39.00
NEC RELAY $39.00
MotorolaPronto $65.00
MOTOROLA EXTRA FLEX $99.00

மாதம் $5.95 மட்டுமே

- 12 மாதங்களுக்கு முன் பணம் செலுத்த வேண்டும்
- Pagerஐ கொள்முதல் செய்ய வேண்டும்
- 3மாத குத்தகையும் உண்டு (ஆரம்பத்தில்)
- ஸ்காபரோவில் கிளைகளும் உண்டு

விபரங்களுக்கு : Raj ☎: (416) 745-2378

## ஞானம்ஸ் ஸ்ரூடியோ

Introducing 1Hour Photo Lab:
3X5 & 8X12
Professional Photographer
தொடர்பு - கதிர்
☎: (416) 750-8118
2425 EGLINTON AV. E. UNIT 3
KENNEDY/ EGLINTON
SCARBOROUGH

## TUITION

அனுபவம் வாய்ந்த தரமான முதுகலை (M.A.) பட்டதாரி ஆசிரியையினால் KINDERGARDEN இலிருந்து Grade 6 வரையிலான பிள்ளைகளுக்கு Tution சொல்லிக் கொடுக்கப்படும
PL. CALL: 755-8034

## RAAJ WATCH WORK

சகல விதமான மணிக்கூடுகளும் (Watch & Clock) குறைந்த கட்டணத்தில், உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் திருத்திக் கொள்வதற்கு நகரில் நாட வேண்டிய ஸ்தாவனம். NATHAN
☎: (416) 265-5580
2885 LAWRENCE AVE. EAST
BRIMLY/ LAWRENCE (Close to Biway)

## சகல ரக வீடியோக்களும் திருத்துமிடம்

TV, VIDEO, MICROWAVE OVEN,
REMOTE CONTROL, AMPLIFIER
நியாயமான விலையில், தரமாகத் திருத்திக் கொடுக்கப்படும். (24 வருட அனுபவம்)
கிருபானந்தராஜா (LONDON QUALIFIED)
TEL: 438-9134

## AIRPORT SERVICE & MOVING VAN

ஏயர்போட்டிற்கு பிரயாணிகள் போய்வருவதற்கான சேவைகளும், மற்றும் பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான சேவைகளிற்கு
☎: (416) 759-0557

## TUITION

FINCH / WESTON
பகுதியில் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் ஆறாம் வகுப்பு தொடக்கம் OAC வரை MATH, PHYSICS பாடங்கள் சிறந்த முறையில் கற்பிக்கப்படும்
BALA:- PAGER :339-3491

## ELECTRICAL REPAIRS

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்
முருகதாஸ்-☎ 261-6883

## TUITION MARKHAM EGLINTON

வகுப்பு 6 தொடக்கம் 13 வரையிலான மாணவர்களுக்கு MATH & PHYSICS தனிப்பட்ட முறையில் B.Sc Graduate இனால் சொல்லிக் கொடுக்கப்படும்
பிரேம் :- ☎: (416) 438-2234

## K.S.M MOVING CHAIRS RENTAL SERVICE

கதிரைகள் வாடகைக்கு 50¢ (Pickup) கதிரைகள் விற்பனைக்கும் உண்டு. குறைந்த செலவில் Moving செய்து தரப்படும்.
☎: சிவா (416) 724-5171

## MOVING DELIVERY

☎: (416) 286-7562
CELLULAR PHONE: 562-7977

*FOR SMALL OR BIG MOVING
* REASONABLE RATES * RELIABLE SERVICES


## DR. B. B. Kalra

Family Physician - (குடும்ப வைத்தியர்)
3268 Finch Ave. E., Scarborough, Ont. (One Traffic light West of Warden)
Tel: (416) 492-9880

<u>எங்களின் சேவைகள்</u>

- வருடாந்த மருத்துவ பரிசோதனை
- குழந்தைப் பராமரிப்புக்கள்
- கர்ப்பப் பரிசோதனைகள்
- குடும்பக்கட்டுப்பாட்டு ஆலோசனைகள்
- பாலியல் நோய்க்குரிய சிகிச்சைகள்
- நோய்த் தடுப்பு ஊசிகள், E.C.G சோதனைகள்
- Allergy தடுப்பூசிகள் அவசியமேற்படின் வீட்டில் வந்தும் நோயாளிகளைப் பார்வையிடுவார்.

OHIP உள்ளவர்களுக்கு இச்சேவை இலவசம்




## சிவாகம கிரியா பீடம்



☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr. , Scarborough, Ont.

# அறிவும் ஆக்கமும் (10) - விஜே குலத்துங்கம்



இங்குள்ள அனைவருக்கும் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் எங்கே வேலை எடுக்கலாம், என்ன வேலை எடுக்கலாம், எப்படி எடுக்கலாம் என்ற கேள்வி தோன்றும். ஏறக்குறைய 9% வீதமானோர் வேலை இல்லாது இருக்கும் நிலையில் மற்றவர்களோடு போட்டியிட்டு எவ்வாறு இதில் வெற்றி பெறலாம் என்று பார்ப்போம்.

கனடா போன்ற குளிர் நாடுகளில் நாங்கள் வெளியில் போவதற்கு முதல், காலநிலையை பார்த்து அதற்கேற்றவாறு உடைகளை அணிந்து கொண்டு செல்வோம். அதேபோல வேலை தேடுவதற்கு முதல், என்ன துறைகளில் வேலை இருக்கின்றது என்பதை அறிந்து, அந்த துறைகளுக்குரிய பயிற்சி வகுப்புகளையோ, பயிற்சி நெறிகளையோ கற்று, அதற்கேற்ப நம்மை நாம் தயார் செய்தல் வேண்டும். இலங்கையில் எல்லோரும் பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளிலேயே ஈடுபட விரும்பி அதற்கேற்றவாறு படிப்பை தொடர்வார்கள். ஆனால் இங்கு பல்வேறு துறைகளில் மிகவும் அதிக சம்பளத்துடன் தொழில் புரிய வாய்ப்புகள் உண்டு. பல்கலைக்கழகம் செல்லாதவர்கள் கூட, கல்லூரிகள் டிப்ளோமா போன்ற கல்வித் தகமைகளை தகுந்த கல்வி நெறியை தெரிவு செய்து படித்து பெற்று நல்ல வேலைகளை பெற்றுக் கொள்ளலாம். எனவே முதல் படி யாதெனில் பொருத்தமானவர்களிடம் இருந்து அறிவுரைகளைப் பெற்று சரியான துறையைத் தேர்ந்து எடுத்து, அதில் எம்மை தயார் செய்ய வேண்டும்.

தேவையான தராதரங்கள் தகைமைகளைப் பெற்றவுடன், வேலை தேடுவதுதான் அடுத்த செயல்முறையாகும். ஒன்டாரியோவில் 80%மான வேலைகள் விளம்பரப் படுத்தப்படுவதில்லை. இதற்கு பொருட்செலவு, ஏராளமாக வந்து குவியும் விண்ணப்பப் பத்திரங்கள், உடனடியாக ஆட்கள் தேவைப்படுவது போன்றவை காரணங்களாக உள்ளன. இந்த 80% மான வேலைகளும் தெரிந்தவர்களூடாக - Word of mouth மூலமாகவே எடுக்கப்படுகின்றன. முக்கியமாக தொழிற்சாலை வேலைகள் விளம்பரப்படுத்தப்படுவதில்லை. எனவே எவ்வளவுக் கெவ்வளவு எங்களுக்கு நண்பர்கள், தெரிந்தவர்கள் இருக்கின்றார்களோ, அவ்வளவிற்கு வேலைவாய்ப்பு அதிகமாக இருக்கும் இப்படியாக புதிய அறிமுகங்களை ஏற்படுத்தி அதன்மூலம் பல தொடர்புகளை உருவாக்கி வேலைவாய்ப்பு பெறும் முறை Networking எனப்படும்.

மற்றைய விடயம் வேலைக்காக விண்ணப்பத்திரங்களை அனுப்பும்போது Resume ஐ சரியான முறையில் தயார்படுத்த வேண்டும். குறிப்பாக எல்லா வேலைகளுக்கும் ஒரே Resumeஐ அனுப்பாமல் வேலைகளுக்கு ஏற்றவாறு தயார் செய்தல் வேண்டும் வேலைக்கு சம்பந்தம் இல்லாத கல்வித் தகைமைகள், வேலை அனுபவங்களை குறிப்பிடலாம். விண்ணப்பிக்கும் வேலைக்குத் தேவையான விடயங்களை மாத்திரம் குறிப்பிடுதல் வேண்டும். ஓய்வு நேரத்தை கழிக்கும் முறை - Hobby போன்றவற்றைப் பற்றிக் குறிப்பிடும் போது தனியே செய்யும் விடயங்களை குறிப்பிடாமல், மற்றவர்களுடன் சேர்ந்து Team Work ஆக செய்யும் விடயங்கள் Volunteer Work போன்றவற்றை குறிப்பிடல் வேண்டும். Resume ஐ நன்கு விஷயம் தெரிந்தவர்களின் உதவியுடன் நிரப்புதல் வேண்டும். சுருக்கமாகவும், விளக்கமாகவும் இரண்டு பக்கங்களுக்கு கூடாமல் தயார் செய்தல் வேண்டும். விண்ணப்பப் பத்திரம் நிரப்பினாலும், அதனுடன் Resume ஐயும் அனுப்புதல் நன்று. Resume யுடன் ஒரு Covering Letter அனுப்ப வேண்டும். இக்கடிதத்தில் உங்களின் கடந்த கால சாதனைகள் பற்றி குறிப்பிடுதல் வேண்டும். வேலைசெய்த இடங்களில் செலவைக் குறைக்க எடுத்த வழிவகைகள், நிறுவனத்தின் வெற்றியில் உங்கள் பங்களிப்பு கிடைத்த விருதுகள், சான்றிதழ்கள் போன்றவற்றையும் குறிப்பிடவேண்டும்.

நீங்கள் பல நிறுவனங்களுக்கு Resume அனுப்பும்பொழுது "To Whom it May Concern" என்று எழுதுவதை தவிர்த்தல் வேண்டும். முக்கியமாக Faxல் அனுப்பும் போது யாருக்கு சென்றடைய வேண்டும் என குறிப்பிடாவிட்டால். பல மேசைகளுக்கு அலைந்து, கடைசியில் குப்பைத் தொட்டியை அடைய வாய்ப்புண்டு. எனவே அனுப்பும் நிறுவனத்தை தொலைபேசியில் அழைத்து, வேலைவாய்ப்பை கவனிக்கும் உத்தியோகத்தரின் பெயரை அறிந்து, அவரின் பெயரைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். அனுப்பியபின் இரண்டு கிழமைகளுக்கு ஒரு முறை அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விண்ணப்பத்தின் நிலவரத்தை கேட்டறிய வேண்டும். அழைக்காது விட்டால் நீங்கள் வேறு வேலை எடுத்துவிட்டதாக நினைக்கக் கூடும். இப்படியாக பல இடங்களுக்கு நீங்கள் விண்ணப்பித்தால் நீங்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பம் உண்டு.

கனடாவில் வேலை வாய்ப்பிற்கு, உங்கள் கல்வித்தகைமை வேலை அனுபவம் எல்லாவற்றையும் விட, நேர்முகப் பரீட்சையில் நீங்கள் எவ்வாறு தோற்றுகின்றீர்கள் என்பதே மிகவும் முக்கியமாகும். இதில் பல விடயங்கள் கவனிக்கப்படவேண்டும். நீங்கள் நேர்த்தியாக உடையணிந்து, முடி திருத்தப்பட்டு முகச் சவரம் செய்யப்பட்டு சுத்தமாக செல்ல வேண்டும். நீங்கள் அணியும் உடை மிக இறுக்கமாக இல்லாமலும் அளவுக்கு மீறி பெரிதாக இல்லாமல், சரியான அளவில் இருக்க வேண்டும். ஏனெனில் உங்கள் உடையின் அளவை சரியாக தெரிவு செய்யத் தெரியாமல் உங்களால் எப்படி வேலையை திறம்பட செய்ய முடியுமென வேலை கொடுப்போர் நினைக்கக் கூடும். காற்சட்டை, சட்டை, கழுத்துப்பட்டி போன்றவை பொருத்தமான நிறங்களில் இருக்கவேண்டும்.

அறிமுகம் செய்யும்போது, கைகுலுக்கும் போது நீங்கள் உறுதியான திடகாத்திரமுள்ளவர் என்பதை காட்டக்கூடியவாறு, உறுதியாக கையைப் பற்றிப் பிடித்து ஒரு முறை மாத்திரம் குலுக்குதல் வேண்டும். நீங்கள் நடக்கும்பொழுது சரியான வேகத்தில் நிதானமாக நடக்க வேண்டும். கதிரையில் அமரும்போது சத்தம் ஏற்படுத்தி தொப்பென அமராமல், முழங்கால்களை மெதுவாக மடக்கி, ஆறுதலாக அமரவேண்டும். கதிரையில் நிமிர்ந்து, கைகளை கட்டாமல் திறந்து வைத்து அமரவேண்டும். முகம் புன்முறுவலுடன் சந்தோசமாக இருக்க வேண்டும.. கதைக்கும்பொழுது தெளிவாகவும், உரத்தும் சந்தோஷமாகவும் ஆவலுடனும் கதைக்க வேண்டும். எந்தக் கேள்விக்கும் இயலாது தெரியாது என பதிலளிக்கக் கூடாது. தெரியாது விட்டாலும், விரைவில் கற்றறிந்து விடுவேன், இயலுமானவரை முயல்வேன் என பதிலளிக்க வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் உங்களின் மேல் அவர்களுக்கு ஏற்படும் முதல் தாக்கம் - First Impression தான் உங்களுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பை நிர்ணயிக்கும். மேற்கூறப்பட்ட வேலை வாய்ப்பை தேடும் முயற்சியின் வெவ்வேறு படிமுறைகளில் இன்னும் ஏராளமான விடயங்கள் உண்டு. இவற்றை கற்றறிந்து, கேட்டறிந்து, புத்தகங்களில் வாசித்தறிந்து, இதைப்பற்றி நடக்கும் கருத்தரங்கும், பட்டறை போன்றவற்றில் கலந்து கொள்வதின் மூலம் அவைகளைப் பற்றி அறிந்து கொள்வதாலும் இலகுவில் வேலைவாய்ப்பை பெறலாம். வேலை உங்களைத் தேடி வராது. நீங்கள் வேலையை தேடிப் போகுதல் வேண்டும்.



புதிய நிர்வாகத்தின் கீழ்

Markham / Sheppard பகுதியில்

NEW SPICELAND

☎ : 292-0086


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 84



### இடமிருந்து - வலம்

1. அண்மையில் குளிர்கால ஒலிம்பிக் நடந்த இடம்
4. பண்டகசாலை
5. இசைபாடி உழைப்பவன் (வல-இட்)
7. வழி
9. படுப்பதற்கு உதவும் (வல - இட)
10. கடுமையான இருட்டை குறிக்கும் பெயர் எச்சம்
11. இருபொருட்களிற்கு இடையேயான ஒற்றுமையை குறிப்பது (வல-இட)
12. இராமாயணத்தில் மாயமானக வந்தவன்
14. வண்டி உருள உதவுவது

### மேலிருந்து கீழ்

1. எள்ளில் இருந்து எடுக்கப்படும் எண்ணெய்
2. இலவம் மரத்தின் பழம்
3. பெருமையான தோற்றம்
4. உறக்கத்தில் தெரிவது (கீழ்-மேல்)
6. எண்ணெய் எடுக்க உதவும் இயந்திரம்
7. கண்ணன்
8. காதணி
13. பக்குவம் செய் (கீழ்-மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "ஸ்பைஸ் லாண்ட்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் May 28, 98க்கு முன்னர் கிடைக்க வேண்டும். Address: P.O.Box 37527, 31 Tapscott Rd., Scarborough, Ont. M1B 5P9

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சூ | ரி | ய | கி | ர | க | ண | ம் |
| த் | | | ரீ | | வி | | ய |
| தி | ரா | வி | ட | ம் | | மி | தி |
| ர | | | ம் | | தர | | த் |
| தா | ள் | | | கோ | பி | | ர் |
| ரி | பு | ம் | ல | வ | | | ம |
| | | ட | | ல | | தி | சா |
| இ | ந் | தி | ர | ன் | | பா | |

### #83இல் வெற்றி பெற்றோர்

1) L. Kumarasamy, Donmills
2) Sivakumar V., Toronto


நியூ ஸ்பைஸ்லாண்ட்

5800 Sheppard Ave. E.

Unit#16 Scarborough, Ont.


## கல்லூரி மாணவருக்கான பாட (துறை)த் தெரிவு பயிற்சிமுகாம்

இலங்கைப் பட்டதாரிகள் சங்கம் ஒழுங்கு செய்யும் 11, 12, 13 வகுப்பு மாணவர்களுக்கான பாட(துறை)த் தெரிவு பயிற்சிமுகாம்

**இடம்:** பியர்சன் கல்லூரி போசனைசாலை (ஹிலியட் பாடசாலை நுழைவாயிலில்) 280 Washburn Ave., Scarborough

**காலம்:** மே மாதம் 30ந் திகதி சனிக்கிழமை, காலை 9:00 மணி தொடக்கம் 4:30வரை ( மதிய போசனம் இலவசம்)

இதில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் (அவசியமாய் பெற்றோர்) மே மாதம் 20ந் திகதிக்கு முன்னர் பின்வருவோருடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு தங்கள் பெயர்களை பதிவு செய்ய வேண்டும். (பிரவேசம் இலவசம்)

சங்கரி 281-7723 அற்புதநாதன் 439-7696 சத்தியமூர்த்தி 298-2788


கிரகப் பொருத்தம் பார்த்தல்

3 4

சாதகக் குறிப்பு கணித்தல்

யோ கா சோ தி ட ம்



(416) 299-8361

ல

6

12

எண்சோதிடப்படி ஆலோசனை கூறுதல்


சுபமுகூர்த்தம் கணித்தல்

பலன் பார்த்தல்

10 9

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
**Motor shampoo**
**Interior shampoo**
**Exterior wash & waxing**






**Repairs**
**safety certification**
**overall maintenance**
**under coating &**
**Rust proofing**

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

☎ [416] **285-4998**

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** ( MIDLAND & LAWRENCE )



*We are entering 7 th year service in Scarborough.*



## Better Work ... Less Money

**N.T.E Auto Inc.**
New Trade Engineering

We service
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**


We will reduce the worry and expense of maintaining your car by offering:

- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

**என். ரி. ஈ. ஒட்டோ இங்.**

**NTE AUTO INC.**
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎ (416) 750 - 1573
SIVABALAN






**Pillayar Traders**

**SRILANKAN . EAST & WEST INDIAN**
GROCERIES & TEXTTILES
**3630 LAWRENCE AV. E., SCARBORO**
☎ : **438-7746**


### விஷேச போட்டி இல. 74

1. 1994ம் ஆண்டு உலக உதைபந்தாட்ட போட்டியில் கால் இறுதி ஆட்டத்திற்கு (Quarter Final) வந்த நாடுகளில் 6ஐ தருக.
2. உலக உதைபந்தாட்ட போட்டிகள் 1982-1994 வரை நடந்த நாடுகளில் 3ஐ தருக

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இ | ஆ | ஜ | யா | னி | நெ | கோ | ரு |
| பெ | த் | ரி | அ | ம | த | சி | மே |
| ல் | ஜீ | தா | ய | ர் | ர் | க் | னி |
| நை | ரோ | ம் | லி | ஜே | லா | மெ | யா |
| யா | ரி | கே | ல் | பு | சி | க் | மெ |
| ஸ் | பெ | யி | ன் | ன் | ட | வீ | சு |
| ள் | பி | றே | சி | ல் | தி | வு | ச |
| அ | மெ | ரி | க் | கா | ன் | பெ | ஸ் |

மேற்காட்டப்பட்ட சதுரப்பெட்டிகளில் பல சொற்கள் தலை கீழாக, சீராக, இடம் வலமாக, குறுக்குப்பாடாக (diagonal). நாலு மூலை வழியாகவும் அமைந்துள்ளது. இவற்றை இனம்கண்டு பினவருவனவற்றிற்குரிய விடைகளை June 12, 98 ற்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**# 73ன் விடைகள்**


திலகம், பழமை, புதுமை, வருமானம், ஒலி, கிளர்ச்சி, ஆர்ப்பாட்டம், இன்னல், வடு, அன்பு, உணவு, அரசியல், துன்பம், ஈகை, திறமை, துறவி, புதியவர், காதல், காப்புறுதி, ஐந்து,

**பரிசு பெற்றோர்:**

1) T. Annaladchumy, Scarbrough
2) S. Kanakamma, Toronto

**பரிசுகள்:** பிள்ளையார் ரேடர்ஸ் இல் பாவிக்கக் கூடிய இரண்டு($15, $10) பெறுமதியான vouchers (இவற்றிற்கு cash value கிடையாது)

**விதிகள்:** ஒருவர் எத்தனை முறையும் முயற்சிக்கலாம். பிள்ளையார் ரேடர்ஸ், விளம்பரம் ஊழியர்கள் பங்குபற்ற முடியாது. விளம்பரம் குழுவின் முடிவே இறுதியானது.

## குடும்ப பல்வைத்தியர்
## Family Dentist

**Dr. Mahin Pouyan**

உங்கள் முழுக் குடும்பத்திற்கும் பல் சம்பந்தமான சிகிச்சைகளிற்கு 18 வருட காலம் அனுபவமும், City of NorthYork Public Schools Board of Education ஆல் தெரிவு செய்யப்பட்ட பல் வைத்தியர் Dr. Mahin Pouyan ஐ நாடுங்கள்

☎: (416) **225-5522**

* ஞாயிற்றுக் கிழமைகளிலும் சிகிச்சை வழங்கப்படும்.

**263 Finch Ave. E.** (Finch & Bayview), **North York, Ont. M2N 4S1**



**KING STYLES** **TAILORING & TEXTILE**

CUSTOM MADE MEN AND KIDS CLOTHING

20 வருட அனுபவம் பெற்றவர் (10 வருடங்கள் - கனடா) Mississauga, Brampton தமிழ் மக்களின் ஆடைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உங்கள் அருகாமையில்

KING STYLES TAILORS

**ஆண்களிற்கான:** Suits, Pants, shirts, Blazer, Prince Suit, **சர்வாணி, குர்த்தா, நாஷனல்**

**பெண்களிற்கான சகலவிதமான ஆடைகளும் சிறந்த முறையில் தைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.** தொடர்புகளுக்கு: **"MINIMOD" RANJAN**

**Tel: (905) 281-9725**

1185 Dundas St. E. 2nd Floor, Unit 218, Mississauga, Ont. 14Y 2L6



## நியூ ராஜன் சலூன்

உங்களது அழகு கூந்தலை மேலும் அழகுபடுத்த நகரில் புதியதோர் நிறுவனம்



* பெரியவர்களுக்கு $9.00
* சிறுவர்களுக்கு $7.00
* வயது வந்தவர்களுக்கு விஷேட கழிவு

**Tuesday to Sunday 10:30Am - 7:30Pm**
**Pl. Call: Raja Tel: (416) 741-9198**
**Pager (416) 739-2393**

5010 Steeles Ave. W., Unit 19, (Kipling / Steeles)



# ஆரோக்கிய வாழ்வு (10) - *N.* செல்வசோதி

## உடல் ஆரோக்கியத்திற்கும் நோயை நீக்கவும் உகந்த தேகப்பியாசம்

வாழ்க்கை என்பது சுறுசுறுப்பாக அமைய வேண்டும். சோம்பேறியாக இருப்பது இறப்புக்கு ஒப்பானதாகும் என உடலியல் அறிஞர்கள் கூறுகின்றனர். எனவே உடல் ஆரோக்கியமானதாக இருப்பதற்கு தேகாப்பியாசம் அவசியமாகின்றது.

**தேகப்பயிற்சியும் வேலையும்** தேகப்பயிற்சிக்கும், நாம் செய்யும் வேலைக்கும் இடையில் வித்தியாசம் அதிகம் உள்ளது. இவ்விரண்டினாலும் உடல் நன்கு செயல்படுகிறது. வேலையை நாங்கள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகச் செய்கின்றோம். ஆனால் தேகப்பயிற்சியோ பல்வேறு விரிவான கோணங்களில் உடலை நன்கு வளையத்தக்கதாக்குகிறது. தசைகள் வலுவடைகின்றன. வேலை செய்தும் போது குறைவான உடல் உழைப்பு மட்டும் போதுமானது. ஆனால் தேகப்பயிற்சிக்கு உடல் முழுதும் அதிக அளவு வளைத்து நிமிர வேண்டும். அதே சமயம் மனமும் முழுமையாக அதில் ஈடுபடவேண்டும்.

**பலன்கள்**

1. வழக்கமான சீரான தேகப்பயிற்சி செய்தால் உடல் அதிக உணவை உட்கொள்ளும். இதனால் உடல் ஆரோக்கியமாகின்றது. உடலின் உஷ்ணம் அதிகரிக்கின்றது. ஆரோக்கியமான மனிதனின் உடலில் சூடும் கதகதப்பான கதிர்வீச்சும் இருக்க வேண்டும். 2. சீரான தேகப்பயிற்சியின் மூலம் சீரான முறையில் தானகவே இயங்கும் நரம்பு மண்டலம் வலுப்பெறும். உணர்ச்சி நரம்புகள் அவற்றின் இயக்கம் வலுவடையும். இதனால் நாடித்துடிப்பும் இரத்த ஓட்டமும் சீர் அடையும். 3. ஒழுங்கான யோகாசனப் பயிற்சியால் இரத்தக்குழாய்கள், தசைகள் நன்கு இயங்குவதோடு இதன் பயன்கள் உடல் முழுவதற்கும் கிடைக்கச் செய்கிறது. இதயம் சார்ந்த பகுதிகளில் ரத்த ஓட்டம் நடைபெறுவதால் சோர்வு சீக்கிரம் ஏற்படாது. 4. யோகாசனப் பயிற்சியில் நுரையீரல் நன்கு சுருங்கி விரிகிறது. இதன் காரணமாக மூச்சுத் திணறல் (Ashma) என்பவற்றிலிருந்து உடலைப் பாதுகாக்க முடிகிறது. 5. வாயுத் தொல்லை குடல் உபத்திரபவங்கள் நீங்குகின்றன.6. ரத்த நாளங்கள் தேகப்பயிற்சியின் போது நன்கு இயங்குவதால் ரத்தம் உடல் முழுதும் நன்கு ஓடுகிறது. 7. வியர்வையின் மூலம் உடலின் கழிவுகள் நீங்குவதால் சிறுநீரகத்தின் பணி குறைகிறது. சரியான முறையில் யோகாசனப் பயிற்சி செய்தால் உடலும் உள்ளமும் ஒன்றாக இணைந்து செயல்படுகிறது. இதனால் மனம் பதறல் (Tention) மன இறுக்கம் (Stress) ஏற்படுவதில்லை.

**யோகாசனப் பயிற்சியால் வாழ்நாள் அதிகரிக்கும்.**

கடின உழைப்பாளிகளுக்கு இருதய நோய் (Heart Attact) வருவது அரிது. மேலும் கடின உழைப்பு இல்லாதவர்கள் (Heat Attact) வந்தால் ஒரு சில மணிநேரத்திலேயே இறந்துவிடுகின்றனர் என்ற உண்மை ஆராய்ச்சியின் மூலம் தெரிய வந்துள்ளது. பல ஆராட்சிகளின் பயனாக தெரிய வந்த உண்மை என்னவெனில் உடல் ஆரோக்கியசாலிகளுக்கு உயர் ரத்த அழுத்தம் (High Blood Presure) வருவதில்லை என்பதாகும்.


**தேகப்பயிற்சி முறைகள்** தேகப்பயிற்சிகளும் யோகாசனங்களும் உடலுக்கு நலன் பயக்கும் பயிற்சிமுறைகளாக இருந்தாலும் அதனை ஒழுங்காக சீராக தகுந்த ஆசானின் வழிகாட்டுதலின்படி செய்ய வேண்டும். இயற்கை வழியில் தசைகளுக்கு சுறுசுறுப்பு வரும் முறையில் தேகப்பயிற்சியைச் செய்யவேண்டும். அதுபோன்று ஒரு எளிய தேகப்பயிற்சி நடப்பதாகும். இவ்வாறு சுறுசுறுப்பாக பல கிலோமீட்டர் நடப்பதும் தேகப்பயிற்சிக்கு சமனானது. நீந்துதல், சைக்கிள் ஓட்டுதல், டெனிஸ் போன்ற விளையாட்டுகளும் நல்ல தேகப்பயிற்சியாகும்.

**எச்சரிக்கைகள்** சாப்பாட்டுக்கு சற்று நேரம் முன்பும், சாப்பாடு முடிந்து இரண்டு மணி நேரத்திற்குள்ளும் எந்தவித தேகப்பயிற்சியிலும் ஈடுபடக்கூடாது. ஆஸ்துமா, இருதய நோய், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமான தேகப்பயிற்சி செய்யக்கூடாது. ஆரம்பத்தில் சிறுசிறு தேகப்பயிற்சியையும் பின்பு கடினமானவற்றையும் நிறுத்த வேண்டும். தேகப்பயிற்சியின் போது இதயத்துடிப்பு நம் சக்திக்கு மேல் துடிக்கின்றதை உணரும்போது பயிற்சியிலிருந்து சற்று ஓய்வெடுத்து மீண்டும் பயிற்சியைத் தொடங்கலாம். முதியவர்கள் தம் சக்திக்கும் வயதிற்கும் ஏற்றபடி கடும் பயிற்சியையும் நேர அளவையும் குறைத்துக் கொள்ளவேண்டும்.

நன்றி - *Indian Institute Of Yoga*

# உப்பு அளிப்பது மூப்பு

-ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி, பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்



அறுசுவைகளில் முக்கிய சுவையாக பரிமளிப்பது உப்பு. எந்த ஒரு கறியையும் எத்தனை வித மசாலாக்களைப் போட்டு காய்ச்சிய போதும் அதாவது ஒரு பெண் அத்தனை அலங்காரங்களையும் செய்துவிட்டு இறுதியிலே திலகம் வைத்து ஒப்பனையை பூர்த்தி செய்வது போல், கறியை பலவித பொருட்களையும் உபயோகித்து காய்ச்சியபின் அந்த உணவுக்கு உப்புப் போடாவிட்டால் அதன் உண்மையான சுவையை சமையல் பாகத்தில் யாரும் உணரமுடியாது. அதை சுவைத்து உண்ணவும் முடியாது. அந்த அளவிற்கு அதாவது வெற்றிலை, பாக்கு, ஏலம், புகையிலை, கராம்பு, போட்டு மென்ற போதிலும் அதற்கு சுவை கூட்டும் சாதனமாக சுண்ணாம்பு எப்படி விளங்குகிறதோ, அப்படி ஒரு முக்கிய சாதனமாக உப்பு விளங்குகிறது. நளபாகத்தில் இடியப்பம், பிட்டு, இட்லி, தோசை, உப்புமா, பரோட்டா, சப்பாத்தி, பூரி, சாதம், கறிவகை, துவையல், ஊறுகாய், குழம்பு, சொதி வகை எதுவானாலும் சுவையை உண்மையாக அளிக்கும் ஊடகமாக உப்பு விளங்குகிறது என்றால் மிகையாகாது. இதை அறிந்து தான் நம் முன்னோர் பழமொழியாக "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" என்றும் "உப்பிட்ட வரை உள்ளளவும் நினை" என்றும் உப்பின் பெருமையை நமக்கெடுத்தியம்பினார்கள்.

இப்படியாக மனிதருக்கு மட்டுமல்ல பயிர்வகை ஓங்கி வளரும் உரவகையிலும் தாராளமாக உப்பை கலக்கிறார்கள். குளிர் பிரதேசங்களில் பனிக்கட்டியை உருக வைக்கும் சாதனமாகவும், மற்றும் வெடி மருந்துகளிற்கும் உப்பு கணிசமான அளவு பயன்படுத்தப்படுவதை நீங்கள் அறிவீர்கள். மற்றும் உணவுப் பொருட்களுக்கு மட்டுமன்றி சுவைமிக்க உணவுகளை தயாரிக்கும் பெரிய உணவு விடுதிகளில் அதாவது கறிவகைக்கு சிறிது சர்க்கரை எனப்படும் சீனியையும், இனிப்பு உணவுகளுக்கு சிறிதளவு உப்பையும் சேர்ப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள். இல்லை புத்தகங்களில் சமையல் கலை பற்றி படிக்கும் போது படித்திருப்பீர்கள். இப்படியாக உப்பின் கதையே ஒரு தனிக் கதை.

பெரும்பாலும் "முந்நீர்" என்றழைக்கப்படும் அதாவது "ஆற்றுநீர், ஊற்றுநீர், வேற்று நீர்" கொண்டதால் கடலுக்கு சாகரம், சமுத்திரம், ஆழி, முந்நீர் எனப் பல பெயராலும் அழைக்கப்படுகிறது. கடலிலிருந்தே பெரும்பகுதி உப்பு எடுக்கப்படுகிறது. மிகுதி செயற்கையாக உற்பத்தி செய்யப்படுகிறது. உலகிலுள்ள கடல்களிலும் கடலுக்கு கடல் உப்பின் அளவும் வேறுபடுகிறது. சாக்கடல் என்றொரு கடலின் உப்பின் செறிவு மிகமிக கூடுதலாக உள்ளது. இந்த கடலில் யாரும் விழுந்தால் அவர்கள் மூழ்கமாட்டார்கள் மிதப்பார்கள். அவ்வளவு உப்பு கரிக்கும் கடல் இக்கடல். இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் இக்கடலில் எந்த கடல் ஜந்தும் உயிர்வாழ்வதில்லை.

இந்த உப்பை மனித இனமே கூடுதலாக உபயோகம் செய்கிறார்கள். **"அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு"** என்று ஒரு பழமொழியுண்டு. பயிர் வாழ தண்ணீர் மிக மிக இன்றியமையாத ஓர் சாதனம். அதே தண்ணீர் அப்பயிரை மூழ்கடித்து மேவி நிற்குமானால் அதே பயிர் அழுகிவிடும். அதேபோல்தான் இந்த உப்பு மனிதர்க்கு மிக உதவியாகவும் அதே நேரத்தில் அளவு மீறி உபயோகிக்கும் போது விஷமாகவும் செயல்படுகிறது. நாம் உண்ணும் உணவில் கொழுப்பு சத்து மிகுதியானால் கொலஸ்ரோலும், சர்க்கரை அதிகம் உட்கொண்டால் நீரிழிவு நோயும், உப்பு அதிகம் உட்கொண்டால் இரத்தக் கொதிப்பு நோயும், உறைப்பு அதிகம் உட்கொண்டால் குடல் புண் நோயும் வரும் என்பது மருத்துவ உலகு அறிவுறுத்தும் உண்மையாகும்.

இன்று நான் உங்களுக்கு அறிவுறுத்த விரும்பும் செய்தி, உப்பை அளவுக்கு மிகுதியாக உபயோகிப்பதை மிகவும் குறையுங்கள் என்பதே. எந்த விதத்திலும் அதிக உப்பு உண்ணல் உங்களுக்கு நன்மை தரப்போவதில்லை. மாறாக தீமையை தரவே காத்திருக்கின்றதென்ற பெரும் உண்மையை மனதில் தெளிந்து கொள்ளுங்கள். இன்றைய என் தலைப்பே **"மூப்பு அளிக்கும் உப்பு"** என்பதாகும். உப்பை மிகுதியாக உட்கொள்ளும் போது இரத்த கொதிப்பு நோய் ஏற்படுகிறது. அப்போது அது சிறுநீரகங்களை (Kidney) பாதிக்கிறது. சிறுநீரகங்கள் பாதிப்படையும்போது அதிலிருந்து "Dialysis" என்ற கொடிய சிகிச்சைக்கு ஆளாக நேரிடுகிறது. இரத்தத்திலுள்ள கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதில் முக்கிய பங்களிப்பு செய்கிறது சிறுநீரகம் ஆகும். இந்தச் சிறுநீரகங்கள் கெட்டுப் பயனற்றுப் போகும் போது சிறுநீரை ரத்தத்திலிருந்து பிரித்து வேறுபடுத்தி வெளியே அனுப்பப்படாது இரத்தோட்டத்துடன் கலக்கச் செய்கிறது. இதனால் உடல் வீக்கமடைகிறது. இரத்தம் கெடும்போது இருதயம் (Heart) நுரையீரல் (Lung) மூளை (Brain) யாவும் தாக்கப்பட்டு மயக்க நிலையையும் வேறு பலவித நோய்களையும் ஏற்படுத்தி விடுகிறது. இப்படி ஒரு நிலை வரும் போது தான் "Dialysis" என்னும் சிகிச்சை முறை தேவைப்படுகிறது. அதாவது உடலிலுள்ள இரத்தம் முழுவதையும் சிறு குழாய் மூலம் வெளியே எடுத்து அதிலுள்ள வேண்டாத கழிவு பொருட்களை அப்புறப்படுத்தி மீண்டும் இரத்தத்தை சுத்திகரித்து உடலில் ஏற்றும் முறையே டயலிசீஸ் ஆகும். இந்நோய்க்கு முக்கிய காரணம் இரத்தக் கொதிப்பு (Blood Pressure) ஆகும். இந்த இரத்தக் கொதிப்பிற்கு காரணம் அளவுக்கு மிஞ்சிய உப்பு உட்கொள்ளுதல் ஆகும். இந்நோய் வந்தால் மாற்று சிறுநீரக அறுவைச் சிகிச்சை (Kidney Transplant) ஒரு தீர்வாகும். ஏனெனில் சிறுநீரகம் ஒருமுறை பழுதடைந்தால் மீண்டும் தொழிற்படாது.இதில் வியப்பு என்னெவென்றால் சிலருக்கு எத்தனை சிறுநீரகங்கள் இருப்பதென்று அவர்களுக்கே தெரிவதில்லை. தெரியவேண்டிய சூழ்நிலை அனேகமாக ஏற்படுவதில்லை. நண்பரொருவருக்கு இந்நிலை ஏற்படும் போது வைத்தியர்கள் X-Ray எடுத்து பார்த்த போது அவருக்கு ஒரு சிறுநீரகம் இருப்பதை அறிவித்தார்கள். அதை அறிந்து அவர் வியப்பும், வேதனையும் அடைந்தார். உப்பு மட்டுமல்ல மதுபானங்களும் கூட சிறுநீரகத்தை கெடுக்க வல்லது. ஆகவே உங்கள் உடல்நலத்தை மிகவும் சிரத்தை எடுத்து வாழ முயற்சி செய்யுங்கள்.

டயலிசீஸ் என்ற சிகிச்சை முறைக்கு ஆளாகும்போது யாராவது மிக நெருங்கிய உறவினர் அல்லது சகோதரர், சகோதரிகளின் சிறுநீரகம் சிலசமயம் பொருந்திவரும் அல்லது வேறு சிலருடையதும் பொருந்தி வரும். அப்படி பொருந்தி வரும் பட்சத்தில் அவர் தன் இரு சிறுநீரகங்களில் ஒன்றை இந்நோயாளிக்கு தியாகம் செய்தால் அந்நோயாளி பிழைத்துக் கொள்வார் அல்லது காலமெல்லாம் டயலிசீஸ்சில் வாழ நேரிடும். அதிக உப்பினால் இரத்த கொதிப்பு அதிகரித்து சிறுநீரகம் கெடும்போது நீரிழிவு, இருதயநோய், நரம்பு தளர்ச்சி போன்ற நோய்களும் சேர்ந்தே வந்து **"நோய் கொண்டோர் பேய் கொண்டோர்"** என்பது போல் அவர்களை இளமையிலே மூப்பு அடைய வைத்து விடுகிறது. இளமை ஊஞ்சலாட, வாலிப வசந்த வற்றாத வெள்ளத்தில் நீச்சலடிக்க வேண்டிய வேளையில் இரத்தம் கெட்டு நோய்வாய்ப்பட்டு, நாடி, நரம்பெல்லாம் ஓடி, ஒடுங்கி வாழ்வே மாயமாய் கானல் நீராய் போகின்றதன்றோ. ஆகவே நாம் ஒவ்வொருவரும் ஆண்டவன் தந்த இந்த அருமையான உடலை கோயிலாகவும் அதனுள் இருக்கும் உயிரை தெய்வமாகவும் மதித்து **"அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு"** என்று தமிழ் மாமுனி திருவள்ளுவர் அருளிய அற்புத வழியில் நாம் வாழ்ந்தால் நம்மை துன்பம் துயரம் நெருங்குமா?

மனிதன்தான் நாவிற்கு அடிமையாகி நோயாளியாகிறான். மிருகங்கள் ஐந்தறிவுடன் பிறந்தாலும் அவை கடல் பக்கமே போவதில்லை அறிவீர்களா? மனிதருக்கு வரும் நோய்கள் மிருகங்களுக்கு வருவதில்லை. அவை உப்பை உண்பதில்லை. அவை நோயற்று இளமையாக நீண்டகாலம் பெலமாக ஓடி, ஆடி, குறிப்பிட்ட ஆயுட் காலம் வரை ஆனந்தமாய் வாழ்ந்து மறைகின்றன. அவை சீக்கிரம் மூப்பு எய்தாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் உப்பு உண்ணாமையே. (தொடரும்)

மேலதிக தொடர்புகளிற்க்கு: C. S. S. சோமசுந்தரம் Tel: (416) 806-5896


நான் ஒரு வழக்கறிஞர் இல்லை.




குடிவரவு சட்டம் IMMIGRATION LAW

- அகதி நிலை விண்ணப்பம்
- மேன்முறையீடு
- ஸ்பொன்சர்

குற்றவியல் சட்டம் CRIMINAL LAW

விபத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ACCIDENT VICTIMS

ஆகியவற்றில் அனுபவமுள்ள வழக்கறிஞர்களுடன் மொழிபெயர்ப்பாளராகவும், உதவியாளராகவும் தொழில்புரிகின்றேன்.
உங்களுக்குத் தேவையான சட்டசம்பந்தமான உதவிகளுக்கு



தொடர்பு கொள்ளுங்கள்.... எஸ்.கே. தீசன் (416) 631-6322



TAMIL INSURANCE CLAIMS CONSULTANT

"தமிழில் இலவச ஆலோசனை"

வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

✼ தகுந்த ஆலோசனை ✼ சட்ட உரிமைகள்
✼ விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடு
✼ உரிய நஷ்டஈடு ✼ மற்றைய இழப்பீடு
✼ மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும், அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள

ரவி நடராஜா (12 வருட கால அனுபவமுள்ளவர்)

தொடர்புகொள்ளுங்கள்: TEL: (416) 245-6555
FAX: (416) 245-7766
2095 Weston Rd., #201 (South of HWY 401), Toronto, Ont. M9N 1X7

மலிவு விலையில் பெரும் சாதனை படைத்த பஞ்சுளா பஷனின் 5வது ஆண்டு நிறைவு விழாவையும்
6வது பிறந்ததின விழாவையும் முன்னிட்டு ரோரன்ரோ மாநகரம் இதுவரை கண்டிராத

# மஞ்சுளா பஷன்

வழங்கும்

# மாபெரும் மலிவு விற்பனை

**மே 1ம் திகதி - மே 30ம் திகதி வரை**
**காலை 11மணி - இரவு 10மணி வரை**

*1998ம் ஆண்டிற்கான புதிய டிசைன்களில் பேபி சாலினி சூட், பஞ்சாபி சூட், கராசூட், நக்மா சூட், சோலி இவைகள் நேரடித் தெரிவுகளுக்கு பம்பாய், டில்லி ஆகிய இடங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. மஞ்சுளா பஷனை விட எங்காவது பொருட்கள் மலிவு விலையில் கிடைத்தால் பணம் மீளளிக்கப்படும்.*

## மங்கையர்களிற்கான மங்கள உடைகள்

| சேலைகள் | நடைமுறை விலை | | நம்பமுடிாத விலை |
|---|---|---|---|
| கௌரி, காயத்திரி (ஒரிஜினல)................ | 175.00 | from | 100.00 |
| கோலம், றங்கோலி, அபூர்வா.................... | 250.00 | | 150.00 |
| பனாரஸ் புதிய டிசைன்.............................. | 200.00 | from | 99.00 |
| மைசூர் சில்க்........................................ | 100.00 | from | 40.00 |
| கோபுரா சேலை..................................... | 40.00 | | 25.00 |
| நக்மா சேலை........................................ | | from | 40.00 |
| தஞ்சூர் சில்க........................................ | 100.00 | | 60.00 |
| தூய காஞ்சிபுரம்.................................... | 1000.00 | | 450.00 |
| காஞ்சிபுரம் சாறி.................................... | 200.00 | | 99.99 |
| கொட்டன் சாறி....................................... | | from | 15.00 |
| காதல்கோட்டை, கள்வன்சாறி...................... | 40.00 | | 19.99 |
| சற்றின் சில்க் பிளேன் சாறி........................ | 40.00 | | 19.99 |
| பிளேன் பட்லி சாறி with Blouse pcs...... | 40.00 | | 19.99 |
| நைலெக்ஸ் சாறி...................................... | 40.00 | | 19.99 |
| படடர பிளை சாறி.................................... | 40.00 | | 19.99 |
| சற்றின் சாறி with Blouse...................... | 50.00 | | 29.99 |
| கற்பிணிகளிற்கான கர்ச்சிதமான உடைகள் | | | 14.99 |
| இந்தோனேசியா பற்றிக்கவுண் பெரியது...... | 25.00 | | 15.00 |
| இந்தோனேசியா பற்றிக்கவுண் சிறியது .... | 20.00 | | 12.00 |
| சிறீலங்கா பற்றிக்கவுண் .............................. | | from | 10.00 |
| சிறீலங்கா பிறசியர்.................................... | 10.00 | | 5.00 |
| Blouse துணி 2X2.................................. | 4.99 | | 3.49 |
| லைனிங் துணி........................................ | 2.99 | | 1.49 |
| England Skirt &Blouse .................... | 75.00 | | 49.99 |
| பஞ்சாபி சூட் 3pcs.................................. | 40.00 | | 24.99 |


## சிறுவர்களிற்கான சிங்கார உடைகள்

| ஆடைகள் | நடைமுறை விலை | | நம்பமுடியாத விலை |
|---|---|---|---|
| பாவாடை தாவணி 4pcs............................ | 50.00 | | 29.99 |
| பாவாடை தாவணி காஞ்சிபுரம் தைத்தது..... | 75.00 | | 39.99 |
| England Girls Dress........................... | 75.00 | | 39.99 |
| பாவாடை சட்டை...................................... | | from | 14.99 |
| நக்மா சூட்................................................ | | from | 34.99 |
| England New Born Dress................ | 25.00 | | 14.99 |
| Boys மடிசார் சூட்.................................. | 34.99 | | 19.99 |
| Boys Shirts........................................ | 14.99 | | 4.99 |
| Boys Pants England.......................... | | | 9.99 |
| Boys Set............................................ | | from | 19.99 |
| Boys England Suits Sets.................... | | from | 29.99 |
| England விஜய் Boys Sets.................. | 99.99 | | 64.99 |

| | | | |
|---|---|---|---|
| **Welcome Set..............** | **20.00** | | **9.99** |
| **மணவரைவேசை விரிப்பு கம்பளம்...........** | **30.00** | **from** | **17.99** |

**இன்னும் பலப்பல தெரிவிற்கு நாடுங்கள் மஞ்சுளா பஷன்**

**5818 Sheppard Ave. East , #203**
**Scarborough, Ont. (Markham / Sheppard)**
**Tel. (416) 297-9875**



**மணமகனிற்கு தேவையான தலைப்பாகை, சர்வாணி சூட், வாடகைக்கு கொடுக்கப்படும்**

*** இலவசம்* *இலவசம்***

**$300**க்கு மேல் கொள்முதல் செய்யும் வாடிக்கையாளரிற்கு

**$40.00**

பெறுமதியான
கோபுரா சேலை இலவசம்
(3நிறத் தெரிவு உண்டு. றோஸ், பச்சை, நீலம்)

## இந்தியா விலையை விட குறைந்த விலையில் எவர்சில்வர் பொருட்கள்

| | நடைமுறை விலை | | நம்பமுடியாத விலை |
|---|---|---|---|
| நிறைகுடம் set 9pcs.................... | 39.99 | | 24.99 |
| சாப்பாட்டு தட்டு பெரியது................ | 7.00 | | 2.99 |
| இட்டலி குக்கர் பெரியது.................. | 35.00 | | 22.00 |
| இட்டலி குக்கர் சிறியது.................... | 30.00 | | 20.00 |
| செம்பு................................................ | 7.00 | | 3.99 |
| அடுப்பு வளையம்............................ | 4.00 | | 1.99 |
| சொதி வாளி.................................... | 8.00 | | 3.99 |
| ஐஸ்கிறீம் Cup | 3.00 | | 1.49 |
| தண்ணீர் டம்ளர் பெரியது............ | 3.00 | | 0.99 |
| ஸ்ரீமர் 3pcs.................................. | 35.00 | | 24.99 |
| கறிசமைக்கும் சட்டி 2pcs............ | 30.00 | | 16.99 |
| கறிக்கிண்ணம் 24pcs................ | 75.00 | | 49.99 |
| கறிக்கிண்ணம் 10pcs................ | 35.00 | | 22.99 |
| இட்டலி பானை பெரியது............... | 40.00 | | 24.99 |
| இட்டலி பானை நடுத்தரம்............. | 35.00 | | 22.99 |
| இட்டலி பானை சிறியது............... | 30.00 | | 19.99 |
| புட்டுப்பானை பெரியது................. | 15.00 | | 7.99 |
| புட்டுப்பானை பிடியுடன்................. | 25.00 | | 14.99 |
| தேங்காய் துருவி ........................ | 25.00 | | 12.99 |
| ஆலாத்தி எடுக்கும் தட்டு............... | 15.00 | | 7.99 |
| அப்பச் சட்டி (கொப்பர் ) 2pc......... | 30.00 | | 14.99 |
| கொழுக்கட்டை பற்றீஸ் அச்சு......... | 25.00 | | 14.99 |
| பலகார அச்சு 15 சில்லுடன்......... | 3.00 | | .49 |
| காமாட்சி விளக்கு......................... | 10.00 | from | 4.99 |
| கழுத்து இறுக்கு கறுப்பு மாலை..... | 5.00 | | 1.99 |
| Tray வகைகள்............................. | | | 3.99 |
| கரண்டி வகைகள்......................... | | from | 0.99 |
| தேனீர் ஆற்றும் கிண்ணம் பெரியது.... | | from | 5.99 |

## ஆண்களிற்கான அம்சமான உடைகள்

| உடைகள் | நடைமுறை விலை | நம்பமுடியாத விலை |
|---|---|---|
| பட்டு வேட்டி சால்வையுடன்............ | 40.00 | 24.99 |
| பட்டு வேட்டிக்குரிய சேட்............... | 30.00 | 19.99 |
| மாறுகரை வேட்டி சால்வையுடன்... | 60.00 | 39.99 |
| குருத்தா Set 2pcs....................... | 30.00 | 19.99 |
| தூய வெள்ளை பொலியஸ்ரர் வேட்டி சால்வையுடன்.................... | 30.00 | 19.99 |
| சாரம்.......................................... | 10.00 | 4.99 |
| England Shirt............................ | 25.00 | 14.99 |
| England Pants.......................... | 50.00 | 29.99 |
| T-Shirts.................................... | 20.00 | 14.99 |
| England **T-Shirt..............** | 30.00 | 19.99 |
| Shirts........................................ | 30.00 | 19.99 |
| தூய பட்டுவேட்டி சால்வையுடன்.... | 150.00 | 99.99 |

### அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

-வீணை மைந்தன்

# நான் வாழப் போகிறேன் (சுவடு 10)



'பாசத் தமிழ்' என்று புதிய இலக்கணம் வகுத்த 'பாசமலர்' திரைப்படத்தில் திரு. ஆரூர்தாஸ் அவர்களினால் தீட்டப்பெற்ற வசன வரிகள் இன்றும் பாசத்தைப் பொழிவனவாகும். ஒரு கட்டத்தில் தங்கை ராதாவிற்கு அண்ணன் ராஜு (சிவாஜி) பால் கொண்டு வருவார். தங்கை தூங்கிவிடுவாள். " ராதா... அம்மாடி..தூக்கிட்டியா....!" என்று சொல்லி தங்கை எதிர்காலம் பற்றி மலர்களைப் போல் உறங்கும் தங்கையைப் பற்றிக் கனவு காண்பார். 'அம்மாடி' என்று அவர் தங்கையை அழைக்கும் அந்த நெகிழ்வு, பாசம் உயிர்த்துடிப்பு மிகுந்த இரத்தபாசம் இன்று வரை எந்த நடிகர்களினாலும் இந்த ஒரு சொல் மூலம் அந்த உணர்ச்சியைக் கொண்டு வர முடியவில்லை.

அதுபோல் பல இடங்களைப் 'பாசமலர்' திரைப்படத்தில் என்னால் குறிப்பிடமுடியும். "பாசமலர்" காவியத்தைப் பார்த்து... படித்து... தங்கை பாசம் என்றால் இது தான் என்று உணர்ந்து கொண்டவர்களின் நெஞ்சங்களில் நீங்காத நினைவாக நிலையாக இடம் பெற்ற இன்னொரு காட்சி இதுவே இப்படத்தின் முற்றுப்புள்ளி.

".....ஒனக்கு நினைவிருக்காம்மா? நீயும் நானும் அப்ப சின்னப் பிள்ளையாயிருந்தப்ப.... எதுக் கெடுத்தாலும் நீ அழுவே, உன்னைச் சமாதானப்படுத்துறதுக்காக நான் கை வீசம்மா கை வீசு... கடைக்குப் போகலாம் கை வீசு மிட்டாய் வாங்கலாம் கை வீசு.." என்று கூறிக்கொண்டிருக்கும் போதே தொண்டையில் துக்கம் அடைத்து கண்ணீர் கசிந்து அதற்கு மேல் பேச முடியாமல் அழுவதும்....

இறுதியாக "எங்களுக்கும் காலம் வரும்... காலம் வந்தால் வாழ்வு வரும்... வாழ்வு வந்தால் அனைவரையும் வாழவைப்போமே..." என்று உணர்ச்சி வசப்பட்டு தனது பிள்ளையையும் தங்கையின் மகளையும் மார்போடு அணைத்துக் கொண்டு பாடியவாறு உயிர்விடுவதும்...

அண்ணன் உயிர்பிரிந்ததறிந்து தங்கையும் (சாவித்திரி அவர் மார்மேல் வீழ்ந்து உயிர் விடுவதும் அண்ணன் தங்கை உறவிற்குப் புதிய இலக்கணம் வகுத்த ஜீவனுள்ள படைப்பாகும்!

"நீங்கள் என்ன பாசமலர் அண்ணன் தங்கையே" என இன்று திரைக்கதை உரையாடலை எழுதும் அளவிற்கு நிஜமாகிவிட்ட "பாசத்தமிழ்' சிவாஜியின் இன்னொரு தமிழ்த் தொடராகும்....

கவிச்சக்கரவர்த்தி கம்பநாட்டாழ்வாரைப் பேசும் போது நிச்சயம் கடையப்பவள்ளலையோ அல்லது குலோத்துங்க சோழனைப் பற்றியோ பேசியாக வேண்டும்.

அதுபோல் நமது நடிகர் திலகம் அவர்கள் பற்றிப் பேசும் போதோ அன்றி எழுதும் போதோ கலைஞர் மு. கருணாநிதி அவர்களைப் பற்றியும் பேசியாக வேண்டும். கலைஞர் மு.கருணாநிதியையும் சிவாஜியையும் பிரித்துப் பேசமுடியாத காலம் ஒன்றிருந்தது. "பராசக்தி" திரைப்படத்தின் மூலம் சிவாஜி என்ற கலைப்புயல் அறிமுகமாகித்தான் பலருக்கு சிவாஜி கணேசன் அவர்களைத் தெரிய வாய்ப்புக் கிடைத்திருக்கலாம். பராசக்தி காலத்திற்கு முன்பிருந்தே அதாவது 1949ல் தி.மு.க. ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே சிவாஜி அவர்களிடம் தனி மரியாதையும் அன்பும் கொண்டவராகக் கலைஞர் அவர்கள் இருந்தாரென்பதை கலைஞர் அவர்கள் எழுதிய 'நெஞ்சுக்கு நீதி' நூல் வழி அறியக்கூடியதாகவுள்ளது.

'நெஞ்சுக்கு நீதி" இரண்டாம் பாகத்தில் "எங்கிருந்தாலும் வாழ்க" "இயக்கத்தில் சிவாஜி" எனும் இரண்டு தலைப்புகளில் சிவாஜி அவர்களுக்கும் தனக்குமுள்ள தூய்மையான நட்பு பற்றி மிக விபரமாக நினைவு கொள்கிறார் கலைஞர் அவர்கள். பிரபல ஈழத்து எழுத்தாளர் (காலஞ்சென்ற) எஸ். அகஸ்த்தியர் அவர்கள் பிரான்ஸ் நாட்டிலிருந்து தினகரன் பத்திரிகையில் சிவாஜி அவர்கள் பற்றி எழுதிய சிறப்புக் கட்டுரையில் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார். "கழகத்திலிருந்து சிவாஜி வெளியேறாவிட்டால் அண்ணாவிற்கு பின்பு தமிழகத்தின் முதலமைச்சராக சிவாஜி அவர்களே வந்திருப்பார்கள்.... என்று.

அவ்வளவுக்குத் தூய்மையாகவும் பலன் கருதாமலும் தி.மு.க. வளர்ச்சிக்காக அண்ணாவின் தலைமையில் உழைத்தவர் என்பது கலைஞர் அவர்கள் எழுதியதிலிருந்தும் தெளிவாகிறது. "சிவாஜி அவர்கள் 1953ம் ஆண்டு திருப்பதிக்குச் சென்று வெங்கடாஜலபதியை வணங்கினார் " என்பதை பெரிதுபடுத்தி கலைஞரையும் கழகத்திலிருந்து கொண்டே ஓரம் கட்டத் தருணம் பார்த்துக் கொண்டிருந்த ஒரு சிலர் தங்களது கடவுள் மறுப்புக் கொள்கையை முன் வைத்து சிவாஜி அவர்களை மனம் நோக வைத்தார்கள்.

"நான் பிள்ளையாரையும் உடைக்கமாட்டேன். பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்கமாட்டேன்" என்று கடவுள் பிரச்சினையில் கழகத்தின் கருத்தை மிகத்தெளிவாகக் கூறிய அண்ணாவின் ஆழமான சிந்தனையை அரை வேக்காடு ஆவேசக்காரர்களால் தெளிவாக உணர முடியாமல் ...சிவாஜி கணேசன் என்று அழைக்கப்படுபவரை "திருப்பதி கணேசன் என்று கேலி செய்தார்கள்".

1949ற்கு முன்பிருந்தே திராவிடக் கழகத்திலும், அதன் பின் அண்ணாவின் தலைமையில் இயங்கி வந்த தி.மு.கழகத்திலும் முக்கியத் தொண்டராகப் பணிபுரிந்து வந்த சிவாஜி அவர்களை 1953ற்குப் பின்பு தி.மு.கவில் தன்னை இணைத்துக் கொண்ட எம்.ஜி.ஆர். அவர்கள் சிவாஜியைக் கழகத்திலிருந்து வெளியேற்றப் பின்னிருந்து செயல்பட்டவர்கள் பட்டியலில் முக்கியமானவராக இருந்தார் என்பது இன்றும் எத்தனையோ தமிழர்களுக்குத் தெரியாத தகவலாகும்.

கடவுள் மறுப்புக் கொள்கையைக் காரணம் காட்டி சிவாஜி அவர்களை வெளியேற்றிய எம்.ஜி.ஆரும் அவரது ஆதரவாளர்களும் பின்னாளில் அவர் முதலமைச்சராகவிருந்த போது... " முகாம்பிகை அம்மனைத் தரிசிப்பதும் பூஜிப்பதும்... தனது உரிமை என்று வாதிட்டார்கள்...!"

எவ்வளவு வேடிக்கை பாருங்கள். பெருந்தன்மையோடு கழகத்திலிருந்து வெளியேறும் போது கூட... என்னால் அவர்களைப் பின்பற்ற முடியவில்லை அதனால் ஒதுங்கிக் கொள்கிறேன்" என்றுதான் அறிக்கை விட்டாரே தவிர தவறாக எதையும் கூறி கழகத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தவில்லையென்பதை தொடர்ந்தும் அண்ணா, கலைஞர் போன்ற தலைவர்கள் சிவாஜியிடத்துக் கொண்டிருந்த மதிப்பு மிகு பாசத்தால் உணரக்கூடியதாகவிருந்தது.

1953ம் ஆண்டு கல்லக்குடி போராட்டத்தில் கலைஞர் அவர்கள் சிறைபுகாமல் இருந்திருந்தால் சில சமயம் சிவாஜி அவர்கள் கலைஞருக்காகக் கழகத்தில் தொடர்ந்திருந்திருக்கலாம் அல்லது வெளியேறும் காலம் தள்ளிப் போடப்பட்டிருக்கலாம் என்பது எனது எண்ணம்.!

நெஞ்சுக்கு நீதியில் கலைஞர் எழுதுகிறார்... "என்னையும் அவரையும் சிறைச்சாலை ஆறுமாத காலம் பிரித்துவிட்டதைப் பயன்படித்திக் கொண்டு கழகத்திற்கு உள்ளேயிருந்த சிலரும் வெளியே இருந்த சிலரும் தங்கள் முயற்சிகளை முடுக்கிவிட்டு அவரைக் கழகத்திலிருந்து பிரித்துவிட்டார்கள்! அவர் கழகத்திலிருந்து வெளியேற திருப்பதிக்கு சென்று சாமி கும்பிட்டார் " என்பதே பெரும் குற்றச்சாட்டாக அப்போது வெடித்தது. அந்தக் குற்றச்சாட்டிற்கு அன்றைக்குக் கனம் ஏற்றிப் பேசியவர்கள்.. கொள்கைப் பற்றால் கூட அல்ல... சிவாஜியின் மீதிருந்த பொறாமையால் அவரை வெளியேற்ற வெகுண்டெழுந்தனர்!

கட்சியிலிருந்துதான் வெளியேறினாரே தவிர, அண்ணாவின் அன்பு உள்ளத்திலிருந்து அவர் வெளியேறவில்லை. எங்கள் பாசம் மிகுந்த நட்பு அந்த வெளியேற்றத்தால் வெட்டப்படவில்லை. அது தொடர்ந்தது. தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

*சுவடுகள் தொடரும்.....*


**IMMIGRATION CONSULTANT**

Christina Staden, M.A.

Member of the Association of Immigration Counsel of Canada

18 years experience


**Free assessment, LOW COST, money back guarantee***

Tel. Toronto (416) 222-5254 Mississauga (905) 501-0307

9AM.-9P.M.

**Gamini Wanigasekera**

Barrister Solicitor



& NOTARY PUBLIC (ONTARIO)
BARRISTER-AT-LAW (ENGLAND)
ATTORNEY-AT-LAW (SRI LANKA)

காணி, நிலம் - வாங்க, விற்க, அடமானம்
வியாபாரம் - வாங்க, இணைத்தல்
குற்றச் சட்டம் - மது சம்பந்தமான குற்றம்
குடும்பச் சட்டம் - பிரிவு, விவாகரத்து
சொத்து - கடைசி உயில்

இவை சம்பந்தமான சேவைகள் சிறந்தமுறையில் வழங்கப்படும்

**REAL ESTATE** - Buying, Selling &Mortgaging of Homes
**BUSINESS** - Purchase of Businesses & Incorporation, Power of Attorney & Affidavits
**CRIMINAL LAW** - Impaired Driving & Criminal Code Offences
**FAMILY LAW** - Divorce, Separation, Agreements & Custody
**LAST WILLS** - Probate in Canada & SriLanka
**IMMIGRATION** - Refugee Applications

Tel: (416) 449-4294 Fax: (416) 449-4369

*All Languages Spoken*

75 The Donway West , Suite 600, Donmills, Ontario, M3C 2E9


**பூச்சிகளை நீக்கமுடியுமா?**

நீண்ட ஆண்டுகள் பரிசீலித்து பூச்சிகளை முற்றாக அழித்த புதிய முறையினால் உங்கள் வீடுகளில் / வியாபார நிலையங்களில் உள்ள பூச்சிகளை முற்றாக நீக்கிட இன்றே தொடர்புகொள்ளுங்கள்



காந்தன் :(416) 283-9538

# விளையாட்டுத் தகவல்கள் (6)



*[இக் கட்டுரையை உங்களிற்கு தருபவர் உதைபந்தாட்ட நடுவர் சம்மேளனத்தின் (SSRA) செயலாளர் ஆக கடமையாற்றுபவரும், உதைபந்தாட்ட நடுவரும், ஒன்ராரியோவில் நடுவர்களின் (Instructor/Assessor) ஆக கடமையாற்றும் திரு. எஸ். கணேஷ் அவர்கள் ஆகும்.]*

## ITS A WORLD CUP TIME! உலகக்கிண்ணம் -98 (உதைபந்தாட்டம்)

FRANCE 98
WORLD CUP

உலக அனைத்து உதைபந்தாட்ட ரசிகர்களும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த **World Cup,** ஜூன் மாதம் 10ம் திகதி பிரான்ஸ் நாட்டில் நடைபெறவிருக்கின்றது. நான்கு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் இவ்வாட்டம் முதலாவது ஆட்டமாக பிரேசில் & ஸ்கொட்லாண்ட் ஆகிய நாடுகளுக்கிடையில் கனேடிய நேரப்படி 11:30 மணிக்கு ஆரம்பமாகி இறுதியாட்டம் (Final) ஜூலை 12ம் திகதியுடன் முடிவடைகிறது. 32 நாடுகள் கலந்து கொள்ளும் இச்சுற்றுப் போட்டியில் தலா நான்கு நாடுகள் விகிதம் 8 பிரிவாக நடைபெறவுள்ளது.

| | |
|---|---|
| Group A:- | Brazil (1), Scotland (36), Morocco (14) , Norway (4) |
| Group B:- | Italy (10), Chile (17), Cameroon (51), Austria (26), |
| Group C:- | France (7), Saudi Arabia (34), South Africa (35), Denmark (8) |
| Group D:- | Spain (3), Nigeria (71), Paraguay (30), Bulgaria (24) |
| Group E:- | Holland (12), Belgium (41), South Korea (31), Mexico (11) |
| Group G:- | Romania (5), Columbia (9), England (6), Tunisia (23) |
| Group H:- | Argentina (19), Japan (18), Jamaica (39), Croatia (21) |

(#) மேற்குறிப்பிட்ட இலக்கங்கள், இவ்நாடுகள் உலகத்தில் எத்தனையாவது தரத்தில் உள்ளது. (FIFA RANKING LIST) என்பதனை குறிக்கும். 4.97Kilos எடை உள்ள 24K தங்கத்திலான இவ் வெற்றிக்கிண்ணத்தை பெறும் போட்டியில் 2.5 மில்லியன் பார்வையாளர்கள், 12,000 தொண்டர்கள் (Volunteers), 9,000 பத்திரிகை நிருபர்கள் (Journalists), 67 விளையாட்டு உத்தியோகத்தர்கள் (Game Officiasrs), 720 விளையாட்டு வீரர்கள் (Players) கலந்து கொள்ள உள்ளனர்.

இவ்வருட world Cup இல் ஒரு புதிய விதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (Tackle From Behind) பந்தை கொண்டி ஓடும் ஒரு வீரரை பின்பக்கத்தால் தாக்கினால் (Tackle) அதாவது பந்தை விட்டுவிட்டு வீரரின் காலை தாக்கினால் இவ்வருடம் உடனடியாக "Red Card" காட்டி மைதானத்தை விட்டு அவ்வீரர் வெளியேற்றப்படுவார்.

மேலே தரப்பட்டிருக்கும் சகல ஆட்டங்களும் கனேடிய நேரப்படி TSN Channel 30 இல் காண்பிக்கப்படும். அனேகமாக அனைத்து ஆட்டங்களும் நேரடி ஒளிபரப்பு (Live Telecast) என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்

## யோகாஸ் சார்பாக இலவசமாக கிராமத்து விருந்தில் சாப்பிட வேண்டுமா?

### FIRST ROUND

| | | | | | Group | |
|---|---|---|---|---|---|---|
| June 10 | 11:30 a.m. | Brazil | vs. | Scotland | A | Live |
| June 10 | 3:00 p.m. | Morocco | vs. | Norway | A | Live |
| June 11 | 11:30 a.m. | Italy | vs. | Chile | B | Live |
| June 11 | 3:00 p.m. | Cameroon | vs. | Austria | B | Live |
| June 12 | 8:30 a.m | Paraguay | vs. | Bulgaria | D | Live |
| June 12 | 11:30 a.m. | S.Arabia | vs. | Denmark | C | Live |
| June 12 | 3:00 p.m. | France | vs. | S. Africa | C | Live |
| June 13 | 8:30 a.m. | Spain | vs. | Nigeria | D | Live |
| June 13 | 11:30 a.m. | S. Korea | vs. | Mexico | E | Live |
| June 13 | 3:00 p.m. | Holland | vs. | Belgium | E | Live |
| June 14 | 8:30 a.m. | Argentina | vs. | Japan | H | Live |
| June 14 | 11:30 a.m. | Yugoslavia | vs. | Iran | F | Live |
| June 14 | 3:00 p.m. | Jamaica | vs. | Croatia | H | Live |
| June 15 | 8:30 a.m. | England | vs. | Tunisia | G | Live |
